சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

SC 18/2018

பெயர் Dr. முகமது அசாருதீன்

PW 7

<u>கூடுதல் குறுக்கு விசாரணை</u>

மாரிமுத்து சிகிச்சைக்கு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது குறித்து நாங்கள் மருத்துவமனையிலிருந்து விபத்து பதிவேட்டு நகல் பதிவு செய்த பின்னர் மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு குறிப்பாணை கொடுப்பது வழக்கம். மாரிமுத்து சிகிச்சைக்கு வந்தவுடன் மேல்சிகிச்சைக்காக எவ்வளவு நேரத்தில் தேனி க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சுமார் 1 மணி நேரம் இருக்கும், சரியான கால அளவு ஞாபகம் இல்லை. காவல் நிலையத்திற்கு காயம் பட்ட மாரிமுத்தை மேல்சிகிச்சைக்கு அனுப்பிவிட்டதாக 6.15 மணிக்கு தகவல் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். காயம் பட்ட மாரிமுத்து நேரடியாக அவரது உறவினருடன் மருத்துவமனைக்கு வந்தார். அவருடன் வந்த உறவினர் பெயரை நான் விபத்து பதிவேட்டு நகலில் பதிவு செய்யவில்லை. காயம் பட்ட நபர் அனுமந்தன்பட்டி, அருகே உள்ள சந்தை என்ற இடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் காயம் பட்ட நபரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவோடு தான் இருந்தார். காயம் பட்ட நபர் தன்னை யார் தாக்கினார் என பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அடையாளம் தெரிந்த நபர் தாக்கியதாக சொன்னார். காயம் பட்ட நபர் மேல் சிகிச்சைக்காக தேனி, மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து, அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என அந்த மருத்துவர்கள் கொடுத்த காயச்சான்றிதழ் படி தான் நானும் கொடுங்காயம் என சான்றிதழ் வழங்கினேன். மேல்சிகிச்சை எடுத்த ஆவணங்களை எனது விசாரணையில் புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் மாரிமுத்து மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கொடுங்காயம் என சான்று வழங்கினேன் என்றால் சரியல்ல. மேல்சிகிச்சை வழங்கிய மருத்துவர் தான் காயங்களின் தன்மை குறித்து அரிதியிட்டு சாட்சியம் அளிக்க முடியும் என்றால் சரியல்ல.

1)_________________

என் முன்பு Microsoft Teams Video Meeting மூலமாக விசாரணை நடைபெற்றது.2)______________

Taken down by me in the open Court and read over to the witness admitted by the witness to be correct.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.11 12:40:01 +0530

Sub Judge

Uthamapalayam.